கடைசி கேள்வி, ஓட்டுப்பதிவு முடிந்த பிறகு, ஓட்டுப்பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட ஓட்டுப்பதிவு எந்திரம், கட்டுப்பாட்டு எந்திரம், ஒப்புகை சீட்டு எந்திரம் ஆகிய மூன்றுக்கும் 'சீல்' வைக்கப்பட வேண்டும். இதுபற்றிய விளக்கம் தேவைப்படுகிறது.

இவ்வாறு நீதிபதிகள் கூறினர்.

### தேர்தல் கமிஷன் விளக்கம்

பின்னர், பிற்பகல் 2 மணிக்கு இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. மூத்த துணை தேர்தல் கமிஷனர் நிதேஷ்குமார் வியாஸ் ஆஜராகி, நீதிபதிகள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார். அவர் கூறியதாவது:-

ஓட்டுப்பதிவு எந்திரம், கட்டுப்பாட்டு எந்திரம், ஒப்புகை சீட்டு எந்திரம் ஆகிய மூன்றுக்கும் தனித்தனி மைக்ரோகண்ட்ரோலர்கள் உள்ளன. அவற்றில் ஒருதடவை மட்டுமே 'புரோகிராம்' செய்ய முடியும். 'மறு புரோகிராம்' செய்ய முடியாது. 3 எந்திரங்களுக்கும் 'சீல்' வைக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

### ஒத்திவைப்பு

ஆனால், மைக்ரோகண்ட்ரோலர்களில் 'மறு புரோகிராம்'செய்ய முடியும் என்றும், அதனால் முறைகேடுகளுக்கு வாய்ப்புள்ளது என்றும் மனுதாரரின் வக்கீல் பிரசாந்த் பூஷண் கூறினார்.

அதற்கு நீதிபதிகள், "தொழில்நுட்பம்சார்ந்த விவகாரங்களில்தேர்தல் கமிஷன் சொல்வதை ஏற்க வேண்டும். தேர்தல்களில் முறைகேடு நடந்ததாக இதுவரை ஆதாரம் அளிக்கப்படவில்லை. அனைத்து சந்தேகங்களுக்கும் பதில் கிடைத்துள்ளது" என்று கூறினர்.

வழக்கின் மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

News regarding court adjourned the Judgment of Counting acknowledgment slips.

தினத்தந்தி

25 APR 2024

நெல்லை நாடாளுமன்ற தொகுதி

# பா.ஜனதா, காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஏப்.25-

நெல்லை பா.ஜனதா வேட்பாளர் நயினார் நாகேந்திரனின் உதவியாளர்கள் ரெயில் மூலமாக நெல்லைக்கு கொண்டு செல்ல முயன்ற ரூ.3.99 கோடியை தாம்பரம் ரெயில் நிலையத்தில் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதேபோல நெல்லை காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ்க்கு ஆதரவாக பணப்பட்டுவாடா செய்வதற்காக நெல்லை கிழக்கு தி.மு.க. மாவட்டச் செயலாளரின் அலுவலகத்தில் இருந்து ரூ.28.51 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

இதையடுத்து பா.ஜனதா மற்றும் காங்கிரஸ் வேட்பாளர்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும். பணம் பறிமுதல் தொடர்பாக அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று நெல்லை நாடாளுமன்ற தொகுதி சுயேச்சை வேட்பாளர் ராகவன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், சுந்தர் மோகன் ஆகியோர் முன்பு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, தேர்தலில் பறிமுதல் செய்யப்படும் பணம் குறித்து வழக்குப்பதிவு செய்ய முடியுமா? என்பது குறித்து விளக்கம் அளிக்கும்படி அமலாக்கத்துறைக்கு உத்தரவிட்டு இருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதிகள் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது. அமலாக்கத்துறை தரப்பில் ஆஜரான சிறப்பு குற்றவியல் வக்கீல் என்.ரமேஷ். 'தேர்தல் நேரத்தில் வேட்பாளர்களின் ஆதரவாளர்களிடமிருந்து பணம் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பான வழக்கை, சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட குற்றமாக கருத முடியாது என்பதால் இதுதொடர்பாக அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த முடியாது' என்று விளக்கம் அளித்தார்.

அதுகுறித்து பதில் மனுவும் தாக்கல் செய்தார். இதைப்பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

The Madras High court dismissal the case against BJP, Congress candidates.

தினத்தந்தி

25 APR 2024

### நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயிலில் ரூ.4 கோடி கைப்பற்றிய வழக்கு

# நயினார் நாகேந்திரனுக்கு போலீசார் மீண்டும் சம்மன்

## மே 2-ந்தேதி ஆஜராக உத்தரவு

தாம்பரம், ஏப்.25-

நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயிலில் ரூ.4 கோடி கைப்பற்றிய வழக்கில் நயினார் நாகேந்திரனுக்கு மே 2-ந்தேதி ஆஜராகும்படி போலீசார் 2-வது சம்மன் அனுப்பி வைத்துள்ளனர்.

### ரூ.4 கோடி பறிமுதல்

சென்னையை அடுத்த தாம்பரம் ரெயில் நிலையத்தில் கடந்த 6-ந் தேதி இரவு நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயிலில் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய சோதனையில் ரூ.4 கோடி கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக தாம்பரம் போலீசார் வழக்குப் பதிவு செய்து நெல்லை தொகுதி பா.ஜனதா வேட்பாளரான நயினார் நாகேந்திரனின் ஓட்டல் மேலாளர் சதீஷ், நவீன் மற்றும் பெருமாள் ஆகிய 3 பேரை கைது செய்தனர்.

ஜெய்சங்கர், ஆசைத்தம்பி, முருகன், சென்னை அபிராமபுரத்தை சேர்ந்த பா.ஜனதா மாநில தொழில்துறை பிரிவின் தலைவர் கோவர்தனன், ஆகியோர் பணம் கொடுப்பார்கள். அவற்றை மொத்தமாக சேர்த்து எடுத்து வரும்படி நயினார் நாகேந்திரன் கூறியதாக கைதானவர்கள் போலீசாரிடம் வாக்குமூலம் அளித்தனர்.

அதனடிப்படையில் இந்த வழக்கு தொடர்பாக நயினார் நாகேந்திரன் உள்பட இவர்கள் 8 பேரும் தாம்பரம் போலீஸ் நிலையத்தில் ஆஜராகும்படி சம்மன் அனுப்பப்பட்டது.

### கால அவகாசம்

ஆனால் நயினார் நாகேந்திரன், சொந்த காரணங்களுக்காக நேரில் ஆஜராக 10 நாள் கால அவகாசம் கேட்டு தனது வக்கீல் மூலம் கடிதம் அனுப்பி வைத்தார்.

இதையடுத்து ஆசைத்தம்பி, ஜெய்சங்கர், நயினார் நாகேந்திரனின் உறவினராக முருகன் ஆகியோர் மட்டும் தாம்பரம் போலீஸ் நிலையத்தில் உதவி கமிஷனர் நெல்சனை மற்றும் இன்ஸ்பெக்டர் பாலமுரளி சுந்தரம் ஆகியோர் முன்னிலையில் ஆஜரானார்கள்.

இதில் முருகனிடம் 50-க்கும் மேற்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டது. அப்போது அவர், "நயினார் நாகேந்திரன் உதவியாளர் மணிகண்டன் கேட்டுக்கொண்டதன் பேரில் ஆசை தம்பி, ஜெய்சங்கர் இருவரையும் நான் அனுப்பி வைத்தேன். ஆனால் பணம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது" என அவர் தனது வாக்குமூலத்தை எழுத்துப்பூர்வமாக அளித்து சென்றார்.

### 2-வது சம்மன்

இந்தநிலையில் நயினார் நாகேந்திரனுக்கு போலீசார் 2-வது முறையாக சம்மன் அனுப்பிவைத்துள்ளனர். அதில் மே மாதம் 2-ந்தேதி நயினார் நாகேந்திரன் மற்றும் அவரது உதவியாளர் மணிகண்டன் ஆகிய இருவரும் தாம்பரம் போலீஸ் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என உத்தரவிடப்பட்டு இருந்தது. தாம்பரம் போலீஸ் நிலையத்தில் பணியாற்றும் போலீஸ்காரர் ஒருவர் மூலம் நேரடியாக நயினார் நாகேந்திரனிடம் இந்த சம்மன் வழங்க உள்ளதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக வருமான வரித்துறையும் விசாரணை நடத்தி வருகிறது. மே 2-ந்தேதி நயினார் நாகேந்திரன் தாம்பரம் போலீஸ் நிலையத்தில் ஆஜராகி தனது தரப்பு பதிலை எழுத்துப்பூர்வமாக அளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

Police Summon Nainar Nagendran again to appear on may 2 for seizure of Rs 4 Crore in Train.

தினமலர்

25 APR 2024

# தேர்தல் பத்திரம் வாங்கிய நிறுவனங்கள் தொடர்பை விசாரிக்க கோரி புது வழக்கு

**புதுடில்லி, ஏப். 25–**

தற்போது ரத்து செய்யப்பட்டுள்ள தேர்தல் பத்திரங்களை வாங்கிய நிறுவனங்கள், அதை பெற்ற கட்சிகள் மற்றும் மத்திய விசாரணை அமைப்புகள் இடையே உள்ள தொடர்புகள் குறித்து விசாரிக்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மத்திய அரசு, 2018ல் அறிமுகம் செய்த தேர்தல் பத்திரங்கள் முறை செல்லாது என, உச்ச நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டது. இது தொடர்பான தகவல்கள் தேர்தல் கமிஷன் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

### ஊழல்

இந்நிலையில், 'காமன் காஸ், பொது நலன் வழக்குகளுக்கான மையம்' ஆகிய இரண்டு அரசு சாரா அமைப்புகள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் புதிய வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

நிலக்கரி சுரங்க ஊழல், 2ஜி ஊழல் போன்ற ஊழல்களில், ஒருதலைபட்சமாக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதாக புகார்கள் எழுந்தன. அதில் பணம் எப்படி கைமாறியது என்பதற்கான ஆதாரங்கள் பெரிய அளவில் கிடைக்கவில்லை.

ஆனால், தேர்தல் பத்திரங்கள் விஷயத்தில், பணம் எங்கிருந்து, யாருக்கு எப்படி சென்றது என்பது தெளிவாக உள்ளது.

தேர்தல் பத்திரங்கள் விவகாரத்தில், பல புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. போலியான நிறுவனங்கள் மற்றும் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களும் கோடிக் கணக்கில் தேர்தல் பத்திரங்களை வாங்கி, அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாக அளித்துள்ளன.

### உண்மைகள்

இதைத் தவிர, மத்திய விசாரணை அமைப்புகள் விசாரித்த நிறுவனங்கள், தேர்தல் பத்திரங்களை வாங்கி, அரசியல் கட்சிகளுக்கு அளித்துள்ளன.

அதனால், இந்த விவகாரத்தில், யார், எதற்காக, எப்படி, யாருக்காக இந்த பத்திரங்கள் வாங்கினர், கொடுத்தனர் என்பது குறித்து எஸ்.ஐ.டி., எனப்படும் சிறப்பு விசாரணை குழு அமைத்து விசாரிக்க வேண்டும். அதுவும், நீதிமன்ற கண்காணிப்பில் நடக்க வேண்டும். அப்போது மேலும் பல உண்மைகள் தெரியவரும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்து.

A new case has been filed to investigate the relationship of the companies that bought the election papers.

தினமலர்

25 APR 2024

# தேர்தல் கமிஷன் செயல்பாடுகளில் உத்தரவிட முடியாது: சுப்ரீம் கோர்ட்

**புதுடில்லி, ஏப். 25–**

'உச்ச நீதிமன்றம், தேர்தல்களை கட்டுப்படுத்தும் ஆணையம் அல்ல. அரசியலமைப்பு சட்ட அமைப்பான தேர்தல் கமிஷனின் செயல்பாடுகளில் உத்தரவிட முடியாது' என, உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

லோக்சபாவுக்கு தேர்தல் நடந்து வருகிறது. தற்போது ஒரு தொகுதியில், ஐந்து ஓட்டுச் சாவடிகளில், பதிவாகும் ஓட்டுகள், 'விவிபாட்' எனப்படும் ஓட்டு உறுதி சீட்டு இயந்திரத்தில் பதிவாகும் ஓட்டுகளுடன் ஒப்பிட்டு பார்க்கப் படுகிறது.

அனைத்து ஓட்டுச் சாவடிகளில் பதிவாகும் ஓட்டு உறுதி சீட்டுகளையும் எண்ண உத்தரவிடக் கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு நீதிபதிகள் சஞ்சிவ் கன்னா, திபாங்கர் தத்தா அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

நேற்று காலையில் விசாரணைக்கு வந்தபோது, சில சந்தேகங்கள் இருப்பதால், தேர்தல் கமிஷனின் உயரதிகாரி ஒருவர் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி அமர்வு கூறியது.

அதன்படி, தேர்தல் கமிஷனின் துணை தேர்தல் கமிஷனர் நிலேஷ் குமார் வியாஸ் நேரில் ஆஜராகி, அமர்வின் தொழில்நுட்ப கேள்விகளுக்கு பதிலளித்தார்.

குறிப்பாக, மின்னணு ஓட்டுப் பதிவு இயந்திரம், விவிபாட் இயந்திரம் செயல்பாடுகள் குறித்த கேள்விகளை அமர்வு எழுப்பியது.

அமர்வின் கேள்விகளுக்கு நிலேஷ் குமார் வியாஸ் அளித்த விளக்கம்:

கட்டுப்பாடு பிரிவு, ஓட்டு இயந்திரம் மற்றும் விவிபாட் என, ஓட்டுப் பதிவு இயந்திரம் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

இவை தயாரிக்கப்படும்போதே, அவற்றில், 'மைக்ரோகன்ட்ரோலர்' என்ற, 'சிப்' பொருத்தப்படும். இவைதான், இந்த இயந்திரங்கள் செயல்படுவதற்கு முக்கியமானவை.

இந்த சிப்களில், எந்த நேரத்திலும், யாராலும் எந்த மாற்றமும் செய்ய முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

இதைத் தொடர்ந்து, 'உச்ச நீதிமன்றம், தேர்தல்களை கட்டுப்படுத்தும் ஆணையம் அல்ல. அரசியலமைப்பு சட்ட அமைப்பான தேர்தல் கமிஷனின் செயல்பாடுகளில் உத்தரவிட முடியாது' என, கூறிய நீதிபதிகள் தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்தி வைத்தனர்.

## தகவல் தர மறுப்பு

மின்னணு ஓட்டுப் பதிவு இயந்திரங்களை, இ.சி.ஐ.எல்., எனப்படும் இந்திய மின்னணு வாரியம் மற்றும் பி.இ.எல்., எனப்படும் பாரத் மின்னணு லிமிடெட் நிறுவனங்கள் தயாரிக்கின்றன.

மின்னணு ஓட்டுப் பதிவு இயந்திரம் மற்றும் விவிபாட் இயந்திரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் உதிரி பாகங்களை தயாரிக்கும் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை, வெங்கடேஷ் நாயக் என்ற தன்னார்வலர், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டிருந்தார்.

சட்ட விதிவிலக்குகளை சுட்டிக்காட்டி, இந்த தகவல்களை அளிக்க அந்த நிறுவனங்கள் மறுத்துள்ளன.

Supreme court says that they cant interfere in ECI's functionals.

தினமலர்
25 APR 2024

# கண்ணகி கோவில் காணிக்கை பறிமுதல் செய்தது பறக்கும்படை

கூடலூர், ஏப். 25–

மங்கலதேவி கண்ணகி கோவில் காணிக்கை பணத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

தமிழகத்தில் லோக்சபா தேர்தல் முடிந்த நிலையில் கேரளாவில் இரண்டாம் கட்டமாக நாளை நடைபெறுகிறது. அதுவரை எல்லையோரப் பகுதியில் வாகன சோதனையில் தொடர்ந்து ஈடுபட உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் மாலை தேர்தல் பறக்கும் படை அலுவலர்கள், தேனி மாவட்டம் லோயர்கேம்ப் பென்னிகுவிக் மணிமண்டபம் அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். சித்ரா பவுர்ணமி நிகழ்ச்சிக்குப் பின், இரவு 8:00 மணிக்கு வந்த கண்ணகி அறக்கட்டளையினரின் வாகனத்தை சோதனை செய்தனர்.

கோவிலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய 96 ஆயிரம் ரூபாய் இருந்தது. தேர்தல் விதிமுறை மீறி எவ்வித ஆவணங்களும் இன்றி கொண்டு வந்ததாகக் கூறி, தேர்தல் பறக்கும் படையினர் அப்பணத்தை பறிமுதல் செய்து, உத்தமபாளையம் கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

Goddess Kannagi Temple donation money seized by flying squad.

தினமணி

25 APR 2024

# மே தினம் உள்பட இதர நிகழ்வுகளுக்கு எங்கே அனுமதி பெறலாம்?

**சென்னை, ஏப். 24:** மே தினம் உள்பட அரசியல் கட்சிகள் சார்பில் நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு மாவட்டத் தேர்தல் அதிகாரிகளிடம் அனுமதி பெறலாம் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.



தொழிலாளர் தினமான மே தினம் மே 1-ஆம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி, பல்வேறு தொழிலாளர் அமைப்புகளின் சார்பில் ஆண்டுதோறும் கூட்டங்கள், பேரணிகள் உள்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அதேநேரத்தில், தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில், இந்நிகழ்ச்சிகளுக்கு தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற வேண்டியது கட்டாயமாகிறது.

இதைக் கருத்தில் கொண்டு மார்க்சிஸ்ட் சார்பில், மே தினம் விழாவைக் கொண்டாட தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகுவிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது.

இது குறித்து, தலைமை தேர்தல் அதிகாரி கூறுகையில், மே தின நிகழ்ச்சிகள் நடத்துவது தொடர்பாக அனுமதி கோரப்பட்டது. இதற்கான அனுமதிகளை அந்தந்த மாவட்டத் தேர்தல் அதிகாரிகள்தான் வழங்க வேண்டும் என்பதால், மாவட்ட நிர்வாகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன என்றார்.

CEO, TN informs that permission for events can get from DEO's

தினமணி
25 APR 2024

# தேர்தல் பத்திர திட்டம்: சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை கோரி உச்சநீதிமன்றத்தில் மனு

**புது தில்லி, ஏப். 24:** தேர்தல் நிதிப் பத்திரங்கள் திட்டம் மூலம், பிரதிபலன் பெறும் நோக்கில் அரசியல் கட்சிகளுக்கு பெரு நிறுவனங்கள் அளித்த நன்கொடை தொடர்பாக சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பிப். 15-ஆம் தேதி தேர்தல் நிதிப் பத்திரங்கள் திட்டம் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், அந்தத் திட்டத்தை ரத்து செய்தது. இதைத் தொடர்ந்து, அந்தப் பத்திரங்களை வாங்கியது யார், அந்தப் பத்திரங்கள் மூலம் எந்தெந்தக் கட்சிகள் எவ்வளவு நன்கொடை பெற்றன ஆகிய விவரங்களை, தேர்தல் நிதிப் பத்திரங்களை விநியோகித்து வந்த பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ) தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்தது. உச்சநீதிமன்ற உத்தரவின்படி, அந்த விவரங்கள் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், பின்னர் அந்த விவரங்கள் தேர்தல் ஆணைய வலைதளத்தில் வெளியிடப்பட்டன.

இந்நிலையில், இந்தத் திட்டம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் 2 தன்னார்வ அமைப்புகள் தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேர்தல் நிதிப் பத்திரங்களின் விவரங்கள் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பு கொண்ட அரசு ஒப்பந்தங்கள், உரிமங்கள், குத்தகைகள் உள்ளிட்டவற்றைப் பெறவும், அரசியல் கட்சிகளால் கட்டுப்படுத்தப்படும் அரசு அல்லது அரசுத் துறைகளிடம் இருந்து பலன்களைப் பெறும் நோக்கிலும், பெரு நிறுவனங்களால் பெருமளவு தேர்தல் நிதிப் பத்திரங்கள் வாங்கப்பட்டு நன்கொடை அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

**ஊழலுக்கு சிபிஐ, இடி, ஐடி உடந்தை:** தேர்தல் நிதிப் பத்திரங்கள் திட்டம் மூலம் சிபிஐ, அமலாக்கத் துறை (இடி), வருமான வரித் துறை (ஐடி) போன்ற நாட்டின் சில முக்கிய புலனாய்வு அமைப்புகள் ஊழலுக்கு உடந்தையாக இருந்தது போல தோன்றுகிறது.

இந்தப் புலனாய்வு அமைப்புகளின் விசாரணை வளையத்துக்குள் இருந்த பல நிறுவனங்கள் மத்தியில் ஆளும் கட்சிக்கு பெருமளவு நன்கொடை அளித்துள்ளன. விசாரணை முடிவுகள் தங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல் இருக்க பெருமளவு நன்கொடையை அந்த நிறுவனங்கள் வழங்கியுள்ளன.

எனவே, நன்கொடை அளித்த நிறுவனங்களின் அதிகாரிகள், அரசு அதிகாரிகள், அரசியல் கட்சி நிர்வாகிகள் மட்டுமின்றி சிபிஐ, அமலாக்கத் துறை, வருமான வரித் துறை உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளின் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டுள்ளதுபோல தென்படும் இந்தச் சதியை விசாரணை மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

**உச்சநீதிமன்றம் நியமிக்க வேண்டும்:** இதன் காரணமாக தேர்தல் நிதிப் பத்திரங்கள் மூலம் பிரதிபலன் அடையும் நோக்கில், அரசியல் கட்சிகளுக்கு பெரு நிறுவனங்கள் நன்கொடை அளித்தது தொடர்பாக சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரணை மேற்கொள்ள வேண்டும். உச்சநீதிமன்றத்தால் அந்தக் குழு நியமிக்கப்பட வேண்டும். ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி கண்காணிப்பில் விசாரணை நடைபெற வேண்டும்.

**2ஜி, நிலக்கரி ஊழல் வழக்குகள்:** 2ஜி மற்றும் நிலக்கரி ஊழல் வழக்குகளில் பணப் பரிவர்த்தனைகள் நடைபெற்றதற்கு ஆதாரமில்லை. இருப்பினும் அந்த வழக்குகளில் நீதிமன்றக் கண்காணிப்பின் கீழ் விசாரணை மேற்கொள்ள உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இந்நிலையில், தேர்தல் நிதிப் பத்திரங்கள் முறைகேட்டில் பணப் பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளன. எனவே, இந்த முறைகேடு தொடர்பாக நீதிமன்றக் கண்காணிப்பின் கீழ் விசாரணை மேற்கொள்ள உத்தரவிட வேண்டும்.

தேர்தல் நிதிப் பத்திரங்கள் மூலம், நஷ்டத்தில் இயங்கும் பல்வேறு நிறுவனங்களும் போலி நிறுவனங்களும் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளித்துள்ளன. மேலும் ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடையாத நிலையில், அந்த நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கக் கூடாது. இதை மீறி பல நிறுவனங்கள் தேர்தல் நிதிப் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளித்துள்ளன. இதன் மூலம், 2013-ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டப் பிரிவு 182 (1) மீறப்பட்டுள்ளது. இதுதொடர்பாகவும் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

A petition has been filed in the Supreme Court that the Special investigation committee to investigate the donations for Election bond scheme.

தினமணி
25 APR 2024

# பிரதமரின் பேச்சுக்கு எதிரான புகார்: தேர்தல் ஆணையம் ஆய்வு

புது தில்லி, ஏப். 24: எதிர்க்கட்சிகளின் தொடர் வலியுறுத்தல்களுக்கு இடையே, பிரதமரின் ராஜஸ்தான் மாநில சர்ச்சை பேச்சுக்கு எதிரான புகாரை தேர்தல் ஆணையம் ஆய்வு செய்யத் தொடங்கியிருப்பதாக ஆணைய அதிகாரிகள் புதன்கிழமை தெரிவித்தனர்.

ராஜஸ்தான் மாநிலத்தில் ஞாயிற்றுக்கிழமை பிரசாரத்தில் ஈடுபட்ட பிரதமர் மோடி, காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மக்களுடைய சொத்துகளைப் பகிர்ந்தளித்துவிடும்' என்று குறிப்பிட்டார்.

'நாட்டின் வளங்களில் முஸ்லிம்களுக்கே முன்னுரிமை' என்று முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி இந்தக் கருத்தை பிரதமர் மோடி தெரிவித்தார்.

மேலும்,'இந்தியமக்கள் கடின உழைப்பில் சம்பாதித்த பணம் மற்றும் மதிப்புமிக்க பொருள்களை ஊடுருவல்காரர்களுக்கும், அதிக குழந்தைகளைக் கொண்டுள்ளவர்களுக்கும் பிரித்தளிக்க காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது' என்று காங்கிரஸின் தேர்தல் அறிக்கையைக் குறிப்பிட்டு பிரதமர் மோடி விமர்சித்தார்.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய பிரதமரின் பேச்சுக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

தேர்தல் விதிமுறைகளை மீறிய பிரதமர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கொண்ட குழு தேர்தல் ஆணையத்தில் திங்கள்கிழமை புகார் மனு அளித்தது. பிரதமருக்கு எதிரான புகார் குறித்து கருத்து தேர்தல் ஆணையம் கருத்து தெரிவிக்க மறுத்தது.

பிரதமரின் பேச்சுக்கு எதிரான புகார் மீது நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையம் முனைப்பு காட்டாததைத் தொடர்ந்து, இந்த விவகாரம் தொடர்பாக சட்ட ரீதியிலான நடவடிக்கையை எடுக்கப்போவதாக காங்கிரஸ் கட்சி செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

தேர்தல் ஆணையத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அக் கட்சியின் பொதுச் செயலர் சீதாராம் யெச்சூரி, 'பிரதமர் மற்றும் பாஜகவுக்கு எதிராக தேர்தல் ஆணையம் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும்' என்று வலியுறுத்தி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டார்.

'தேர்தல் ஆணையம் கட்சி சார்பற்று செயல்படுகிறது என்பதை உணர்த்தும் வகையில், காங்கிரஸ் புகார் மீது உடனடி நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல், பிரதமர் விவகாரத்தில் தேர்தல் ஆணையம் தொடர்ந்து மௌனம் காப்பது துரதிருஷ்டவசமானது' என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் செவ்வாய்க்கிழமை குறிப்பிட்டார்.

இந்த நிலையில், பிரதமரின் சர்ச்சை பேச்சுக்கு எதிரான புகாரை தேர்தல் ஆணையம் ஆராயத் தொடங்கியுள்ளது என்று ஆணைய அதிகாரிகள் புதன்கிழமை தெரிவித்தனர்.

ECI has started investigation complaint against the prime minister's speech.

தினமணி
25 APR 2024

# தேர்தலைத் தடுக்க முடியாது

## வாக்கு ஒப்புகைச் சீட்டு வழக்கில் உச்சநீதிமன்றம்



புது தில்லி, ஏப். 24: 'சந்தேகத்தின்பேரில் தேர்தலைக் கட்டுப்படுத்தவோ அல்லது தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்கவோ முடியாது' என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளுடன் வாக்கு ஒப்புகைச் சீட்டுகளை (விவிபேட்) முழுமையாக எண்ணி ஒப்பிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையின்போது உச்சநீதிமன்றம் புதன்கிழமை இந்தக் கருத்தைத் தெரிவித்தது.

மேலும், 'மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் ஏதாவது தவறு நடைபெறுகிறது என்றால் சட்டம் அதை கவனித்துக் கொள்ளும்' என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

முன்னதாக, வழக்கு விசாரணையின்போது மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் செயல்பாடுகள் தொடர்பாக தேர்தல் ஆணைய அதிகாரிகளிடம் 5 கேள்விகளை நீதிபதிகள் எழுப்பினர். அதற்கு அதிகாரிகள் தரப்பில் பதிலளிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் தீர்ப்பை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மீது எதிர்க்கட்சிகள் தொடர்ந்து பல்வேறு சந்தேகங்களை எழுப்பி வருகின்றன. எந்தப் பொத்தானை அழுத்தினாலும் குறிப்பிட்ட ஒரு சின்னத்துக்கு வாக்களிக்கும் வகையில் இயந்திரத்தை மாற்றியமைக்க முடியும் என்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்து வருகின்றன. ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளை தேர்தல் ஆணையம் தொடர்ந்து மறுத்து வருகிறது.

அதைத் தொடர்ந்து, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் பதிவாகும் வாக்குகளையும், ஒப்புகைச் சீட்டுகளையும் முழுமையாக எண்ணி ஒப்பீடு செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இதற்கும் ஆணையம் ஒப்புக்கொள்ளவில்லை.

இந்நிலையில், வாக்குகளுடன் ஒப்புகைச் சீட்டுகளை முழுமையாக எண்ணி ஒப்பீடு செய்ய உத்தரவிடக் கோரி ஜனநாயக சீர்திருத்தத்துக்கான சங்கம் (ஏடிஆர்) என்ற தன்னார்வ அமைப்பு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதே கோரிக்கையை வலியுறுத்தி மேலும் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மீது தொடர் விசாரணை நடைபெற்று வந்தது.

**ஆணையத்திடம் கேள்விகள்:** உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, தீபாங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் இந்த வழக்கு புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தேர்தல் ஆணைய அதிகாரிகளிடம் நீதிபதிகள் 5 கேள்விகளை எழுப்பினர். 'மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் விவிபேட் இயந்திரங்களின் செயல்பாடுகள் தொடர்பாக அவ்வப்போது எழுப்பப்படும் கேள்விகளுக்கு தேர்தல் ஆணையம் அளித்துள்ள பதில்களில் சில குழப்பங்கள் உள்ளன. இந்த இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து எங்களுக்கும் சில சந்தேகங்கள் உள்ளன. அந்த சந்தேகங்கள் மற்றும் குழப்பங்களை தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும்.

அதாவது, விவிபேட் இயந்திரத்தில் உள்ள மைக்ரோ கன்ட்ரோலர் ஒருமுறை மட்டுமே செயல்படுத்தக் கூடியதா? மாற்றியமைக்க முடியாதா?.

வாக்குப் பதிவு இயந்திரத்தில் பதிவாகும் தரவுகளை எத்தனை நாள்கள் சேமித்து வைக்க முடியும்?.

இயந்திரத்தில் சின்னங்கள் பதிவேற்றும் பகுதியை எத்தனை நிறுவனங்கள் தயாரித்து வழங்குகின்றன?. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம், விவிபேட் மற்றும் கன்ட்ரோல் யூனிட் ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் சீல் வைக்கப்படுமா அல்லது வெவ்வேறு நேரத்தில் சீல் வைக்கப்படுமா?.

மைக்ரோ கன்ட்ரோலர் என்பது வாக்குப்பதிவு இயந்திரத்தின் கட்டுப்பாட்டில் பொருத்தப்பட்டுள்ளதா அல்லது விவிபேடில் பொருத்தப்பட்டுள்ளதா ஆகிய கேள்விகளை எழுப்பிய நீதிபதிகள், முதுநிலை துணை தேர்தல் ஆணையர் நிதேஷ் குமார் பிற்பகல் 2 மணிக்கு நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினர்.

அதன்படி, நீதிபதிகள் அமர்வில் நிதேஷ் குமார் நேரில் ஆஜராகி விளக்கமளித்தார். அப்போது, வாக்குப் பதிவு இயந்திரம், விவிபேட் மற்றும் கன்ட்ரோல் யூனிட் ஆகிய மூன்றிலும் தனித்தனி மைக்ரோ கன்ட்ரோலர்கள் இடம்பெற்றுள்ளன. இவை ஒருமுறை செயல்படுத்தக்கூடியவை (புரோகிராம்). அவற்றை மாற்றியமைக்க முடியாது. வாக்குப் பதிவு நிறைவடைந்தவுடன் இந்த மூன்று இயந்திரங்களும் சீல் வைக்கப்பட்டுவிடும்.

இயந்திரத்தில் கட்சியின் சின்னங்களைப் பதிவேற்றம் செய்யும் பகுதியை இந்திய மின்னணு கழக நிறுவனம் மற்றும் பாரத் மின்னணு நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் தயாரித்து வழங்குகின்றன.

அதுபோல, வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் உள்ள தரவுகள் அதிகபட்சம் 45 நாள்கள் வரை பாதுகாத்து வைக்கப்படும். வாக்குப் பதிவுக்கு எதிராக ஏதாவது வழக்கு தொடரப்பட்டுள்ளதா என சம்பந்தப்பட்ட மாநில உயர்நீதிமன்றப் பதிவாளருக்கு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி 46-ஆவது நாள் கடிதம் எழுதுவார். பதிவாளரிடமிருந்து இல்லை என்ற பதில் வந்த பிறகே, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் அறையை தேர்தல் அதிகாரி திறப்பார். இல்லையெனில், யாரும் அந்த அறையைத் திறக்கமாட்டார்கள் என்று பதிலளித்தார்.

அதற்கு மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் பிரசாந்த் பூஷண் ஆட்சேபம் தெரிவித்தார். தேர்தல் ஆணையம் தரப்பில் கூறப்பட்டிருப்பது முழுமையான உண்மையல்ல. 3 கன்ட்ரோல் யூனிட்டுகளிலும் பயன்படுத்தப்படும் சேமிப்பக தொழில்நுட்பத்தை மாற்றியமைக்க முடியும் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்று குறிப்பிட்டார்.

**சந்தேகத்தின்பேரில் கட்டுப்படுத்த முடியாது:** இதைக் கேட்ட நீதிபதிகள், தேர்தல் ஆணையம் தனி அதிகாரம் படைத்த அமைப்பு என்ற வகையில், அதன் தரப்பில் கூறப்படும் தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களையே நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்ளும். மைக்ரோ கன்ட்ரோலரை ஒருமுறை மட்டுமே செயல்படுத்த முடியும்; மாற்றியமைக்க முடியாது என்று தேர்தல் ஆணையம் விளக்கியுள்ளது.

இதில் உங்களுக்கு மாற்றுக் கருத்து இருந்தால் அதற்கு நீதிமன்றத்தால் உதவ முடியாது. உங்களுடைய நினைவலைகளை எங்களால் மாற்ற முடியாது. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் ஏதாவது தவறு நடைபெறுகிறது என்றால் சட்டம் அதை கவனித்துக் கொள்ளும்.

ஆனால், சந்தேகத்தின் அடிப்படையில் தேர்தலைக் கட்டுப்படுத்தவோ அல்லது தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவு பிறப்பிக்கவோ முடியாது. மற்றொரு அரசியல் சாசன அமைப்பைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு இல்லை என்றனர்.

### முந்தைய உத்தரவுகள்...

உச்சநீதிமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற விசாரணையின்போது, முந்தைய இரு உத்தரவுகளை நீதிபதிகள் நினைவுகூர்ந்தனர்.

'யாருக்கு வாக்களித்தோம் என்பதை வாக்காளர் சரிபார்க்க வசதியாக விவிபேட் இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் முதலில் உத்தரவிட்டது. பின்னர், மற்றொரு தீர்ப்பில், ஒரு வாக்குச் சாவடியில் மட்டும் பதிவான வாக்குகளுடன் ஒப்புகைச் சீட்டுகளை எண்ணி ஒப்பீடு செய்யும் நடைமுறையை 5 வாக்குச் சாவடிகளாக அதிகரித்து உத்தரவிட்டது. இவை அனைத்தும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திர நடைமுறையை வலுப்படுத்தும் நோக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளாகும்.

ஆனால், நீங்கள் மீண்டும் பழைய வாக்குச் சீட்டு முறையை அறிமுகம் செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்கள். இதை ஏற்க முடியாது.

இந்த இயந்திரங்களின் செயல்பாடுகளில் சில சந்தேகங்கள் இருந்ததாலேயே, அதுகுறித்து தெளிவுபடுத்துமாறு தேர்தல் ஆணைய அதிகாரிகளை நீதிமன்றம் கேட்டுக்கொண்டது. தற்போது, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களின் திறன் குறித்து இரண்டாவது முறையாக தேர்தல் ஆணையத்திடம் கேள்வி கேட்க முடியாது.

தேர்தல் ஆணையம் தனி அதிகாரம் கொண்ட அமைப்பு. அதற்கென தனி தொழில்நுட்ப நிபுணர்கள் உள்ளனர். தேர்தல் ஆணையம் ஓர் அரசியல் கட்சி கிடையாது' என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

News regarding Supreme Court adjourned the Judgment of acknowledgment slip without specifying date.

தினகரன்

25 APR 2024



### தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ்

# இவிஎம், விவிபேட் உதிரிபாகங்கள் உற்பத்தியாளர் பெயர்களை வெளியிட மறுப்பு

புதுடெல்லி, ஏப்.25: சமூக ஆர்வலர் வெங்கடேஷ் நாயக் என்பவர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் விவிபேட் இயந்திரத்தின் உதிரிபாகங்களை உற்பத்தி செய்பவர்கள் மற்றும் விநியோகிப்பவர்கள் குறித்த விவரங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வழங்குமாறு, எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனங்களிடம் கோரியிருந்தார். மேலும் உதிரிபாகங்கள் கொள்முதல் குறித்த நகலையும் வழங்கும்படி கேட்டுக் கொண்டு இருந்தார்.

வெங்கடேஷ் நாயக் மனுவிற்கு பெல் நிறுவனம் அனுப்பியுள்ள பதில் கடிதத்தில், "கோரப்பட்டுள்ள தகவலானது வர்த்தக ரகசியத்தின் கீழ் வருகின்றது. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரிவு 8 1(டி)ன் கீழ் இந்த விவரங்களை வழங்க முடியாது" என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேபோல் எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் பதிலில்," மனுவின் கேட்கப்பட்டுள்ள விவரங்களை வெளியிடுவது நிறுவனத்தின் போட்டி நிலையை பாதிக்கும். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரிவு 8 1(டி)ன் கீழ் இந்த தகவல்களை தெரிவிக்க முடியாது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. கொள்முதல் நகல் குறித்த மனுவுக்கு பதில் அளித்துள்ள நிறுவனத்தின் பொது தகவல் அதிகாரி, "கேட்கப்பட்டுள்ள தகவல்களை வழங்கினால் அது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் உதிரிபாகங்களின் விவரங்களை தருவதாக அமையும். இது தயாரிக்கப்படும் இயந்திரங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே விவரங்களை வெளியிட முடியாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

C M K

ECI refuse to share the name of manufacturers of EVM, VVpat to R.T.I Act.

தினகரன்
25 APR 2024

கோவையில் மோடி நடத்திய ரோடு ஷோவில் பள்ளி குழந்தைகள்

# வழக்கை ரத்து செய்யக்கோரி பள்ளி நிர்வாகம் மனு தாக்கல்

**ஜூன் மாதத்திற்கு விசாரணை தள்ளிவைப்பு**

சென்னை, ஏப். 25: கோவையில் பிரதமர் நரேந்திர மோடியின் ரோடு ஷோவில் பள்ளிக் குழந்தைகளை பங்கேற்கச் செய்ததாக பதியப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி பள்ளி நிர்வாகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை ஜூன் மாதத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் தள்ளிவைத்துள்ளது.

தமிழகத்தில் மக்களவை தேர்தலை ஒட்டி கடந்த மார்ச் 19ம் தேதி பிரதமர் நரேந்திர மோடியின் சாலைப் பேரணி (ரோடு ஷோ) நடத்தப்பட்டது. இதில், பள்ளிக் குழந்தைகளை பங்கேற்கச் செய்ததாக கோவை தனியார் பள்ளி மீதும், அதன் தலைமை ஆசிரியர் மீதும் சாய்பாபா காலனி போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கின் விசாரணைக்கு தடை விதிக்க வேண்



டும், வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரி அந்த தனியார் பள்ளி நிர்வாகம் சார்பில் அதன் தாளாளர்கள் வேணுகோபால், நிர்மல் குமார் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுக்களில், 'பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்கும் வகையில், 22 மாணவர்களின் பெற்றோரிடம் அனுமதி பெற்றே அவர்கள் பேரணிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மாணவர்கள் யாரையும் நிர்பந்திக்கவில்லை. மாணவர்களை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தவில்லை. பள்ளி நிர்வாகத்தை துன்புறுத்தும் நோக்கத்தில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது' என்று கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜெயச்சந்திரன், விசாரணையை ஜூன் 2வது வாரத்திற்கு தள்ளிவைத்தார். ஏற்கனவே, சாய்பாபா வித்யாலயா என்ற அரசு உதவி பெறும் தனியார் பள்ளி நிர்வாகத்துக்கு எதிராக பதியப்பட்ட வழக்கிற்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

The School admin filed a petition to Dismiss the case regarding School children at modi's road show in coimbatore.

தினகரன்
25 APR 2024

### தமிழகத்தில் விதிமுறைகளை பின்பற்றி

# மே தின கொண்டாட்டங்களுக்கு கலெக்டர்கள் அனுமதி வழங்கலாம்

**தேர்தல் ஆணையம் அறிவிப்பு**

சென்னை, ஏப். 25: தமிழகத்தில் விதிமுறைகளை பின்பற்றி மே தின கொண்டாட்டத்திற்கு கலெக்டர்கள் அனுமதி வழங்கலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற பொதுத்தேர்தல் ஏப். 19 முதல் ஜூன் 1 வரை 7 கட்டமாக நடைபெறுவதால், நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடந்த மார்ச் 16ம் தேதியில் இருந்து அமலில் உள்ளது. தமிழகத்தில் 39 நாடாளுமன்ற தொகுதிக்கும் முதல் கட்டமாக கடந்த 19ம் தேதி வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ளது. கேரளா உள்ளிட்ட சில மாநிலங்களில் 2ம் கட்ட தேர்தல் நாளை நடைபெறுகிறது.

தமிழகத்தில் தேர்தல் நடந்து முடிந்து விட்டாலும், தேர்தல் நடத்தை விதிமுறைகள் ஜூன் 4 வரை தொடரும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார். ஆனாலும், அரசு திட்டங்களுக்கான அனுமதி தேவைப்பட்டால் தேர்தல் ஆணையத்திடம் கடிதம் எழுதி ஒப்புதல் பெற்று, அதை நடைமுறைப்படுத்தலாம் என்று கூறியுள்ளார்.

வருகிற மே 1ம் தேதி தொழிலாளர்கள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. அன்றைய தினம் தமிழகத்தில் அனைத்து தொழிலாளர்களும் கட்சி சார்பிலோ அல்லது தனி அமைப்பாகவோ கொடியேற்றி சிறப்பாக கொண்டாடுவது வழக்கம். சென்னையில் திமுக சார்பில் ஒவ்வொரு ஆண்டும் மே 1ம் தேதி தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மேதின பூங்காவுக்கு ஊர்வலமாக சென்று சிறப்பாக கொண்டாடப்படும்.

இந்த ஆண்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால், ஊர்வலம் மற்றும் கொடியேற்றும் நிகழ்ச்சிகளுக்கு தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன்படி பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புகள் தொழிலாளர்கள் தினம் கொண்டாட தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் கடிதம் மூலம் அனுமதி கேட்டுள்ளனர். இதுபற்றி தேர்தல் ஆணையத்துக்கு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல் தெரிவித்தார்.

தற்போது, தமிழகத்தில் தேர்தல் முடிந்துள்ள நிலையில், விதிமுறைகளை பின்பற்றி மே தின கொண்டாட்டத்திற்கு அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் அனுமதி வழங்கலாம் என்று தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதனால் தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

CEO, TN informs that events permission ~~for~~ can get from DEO's

தினகரன்

25 APR 2024

அண்டை மாநில தேர்தல்

# விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் மீது நடவடிக்கை

## தொழிலாளர் நலத்துறை உத்தரவு

சென்னை, ஏப்.25: கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநிலத்தில் தேர்தல் நடக்கும் போது அண்டை மாநில தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்றும், தவறும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தொழிலாளர் நலத்துறை தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் முதல்கட்ட வாக்குப்பதிவு கடந்த 19ம் தேதி தமிழ்நாட்டில் நடந்து முடிந்துள்ளது. இரண்டாம் கட்டமாக, அண்டை மாநிலங்களான கேரளாவில் மக்களவை தேர்தல் வரும் 26ம் தேதி (நாளை)யும், கர்நாடகாவில் முதற்கட்டமாக வரும் 26ம் தேதி, இரண்டாம் கட்டமாக மே 7ம் தேதியும், ஆந்திராவில் மக்களவை மற்றும் சட்டமன்ற தேர்தல் மே 13ம் தேதியும் நடைபெற உள்ளது.

இதுதொடர்பாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் செந்தில்குமார் வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திர மாநிலங்களில் வாக்குரிமை உள்ள தினக்கூலி, தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களும் உரிய தேர்தல் நாளில் சொந்த மாநிலத்திற்கு சென்று வாக்களிக்க ஏதுவாக மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951, 135(பி)ன் கீழ் அவர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அனைத்து தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் நாட்களில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்காத தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் தொடர்பாக தமிழ்நாட்டில் தங்கி பணியாற்றும் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திர மாநிலங்களில் வாக்குரிமை பெற்ற தொழிலாளர்கள் புகார் அளிக்க ஏதுவாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சார்பில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகள் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

**மாநில கட்டுப்பாட்டு அறை**

| அலுவலர் பெயர் | பதவி | தொலைபேசி எண் |
|---|---|---|
| கார்த்திகேயன் | இணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 9444221011 |
| கமலக்கண்ணன் | இணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 9884675712 |
| சூரியா | ஆட்சி அலுவலர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகம் | 9884470526 |
| சுவேதா | துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 9962524442 |

**மாவட்ட கட்டுப்பாட்டு அறை**

| அலுவலர் பெயர் | பதவி | மாவட்டம் | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| இளவரசன் | துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | சென்னை | 7373278203 |
| அசோக் | துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | செங்கல்பட்டு | 9025155455 |
| திவ்யா | துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | திருவள்ளூர் | 9952000256 |
| பாலமுருகன் | துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | காஞ்சிபுரம் | 9443576011 |

News regarding labour welfare Dept orders to take Action against companies fail to give leave on poll day of neighbouring state.